**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 393/2023**
**வழக்கு சாட்சி PW–12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேல்கனி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுடலைமுத்து | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 08.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆய்க்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, மாரிமுத்து என்ற உதவி ஆய்வாளர் பணியில் இருந்தார். அவர் தற்போது உடல்நலக்குறைவாக இருந்து வருகிறார். அவரின் கையொப்பம் எனக்கு தெரியும். கடந்த 10.04.2023ம் தேதி, 09.00 மணிக்கு அவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஆய்க்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று நெல்லையப்பன் என்பவரை விசாரித்து அவர் தென்காசி மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் 11.00 மணிக்கு அங்கு சென்று நெல்லையப்பன் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து 13.00 மணிக்கு நிலையம் வந்து, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.38/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 342, 307 IPC –

வின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை என்னுடைய பார்வைக்கும் வைத்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.11** ஆகும்.

பின்னர் இந்த வழக்கை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதே தேதி, 14.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாடசாமி மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அ.சா.ஆ.12** ஆகும். பின்னர், சாட்சி நெல்லையப்பன் என்பவரை விசாரித்து தென்காசி மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனையில் வைத்து அவர் ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை ஒன்றை கைப்பற்றி படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.13** ஆகும். வெள்ளை நிற அரைக்கை சட்டை ஒன்று – அ.சா.பொ.2 ஆகும். பின்னர் சாட்சிகள் முத்துக்குமார், சரவணன், மாரியம்மாள், மாடசாமி, பாலமுருகன், உதவிஆய்வாளர் மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 12.04.2023ம் தேதி, காலை 09.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை விசாரித்து 09.45 மணிக்கு கைது செய்து, 09.50 மணி முதல் 10.30 மணி வரை சாட்சிகள் ஆறுமுகம், ராம்குமார் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் தன் மனைவியுடன் வாழமுடியாமல் செய்து விட்டதால், நெல்லையப்பனை கத்தியால் குத்தி முயற்சி செய்ததாக கூறி சம்பவத்திற்கு பயன்படுத்திய

கத்தியை ஆய்க்குடியிலுள்ள ஆழ்வார்க்குறிச்சி சுடலைமாடன் கோவில் பின்புறம் வீசியதை அடையாளம் காண்பித்து ஆஜர் செய்வதாக கூறினார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆய்க்குடியிலுள்ள ஆழ்வார்க்குறிச்சி சுடலைமாடன் கோவில் பின்புறம் கிடந்த கத்தியை சாட்சிகள் ஆறுமுகம், ராம்குமார் முன்னிலையில் அத்தாட்சி 11.00 மணிக்கு பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர், சாட்சிகள் ஆறுமுகம், ராம்குமார், செல்வி, பிரேமா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு, எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 11.17 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து, நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.15** ஆகும்.

பின்னர், 10.05.2023ம் தேதி, காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள்.முகமது தமிழ், நிர்மல், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றுகள் பெற்றேன். பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 342, 307 IPC–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.09 18:04:15 +0530